<u>முதன்மை சார்பு நீதிமன்றம். நாமக்கல்.</u>

முன்னிலை திரு.G.கிருஷ்ணன், B.A., L.L.B.,
முதன்மை சார்பு நீதிபதி,
நாமக்கல்.

<u>அசல் வழக்கு எண்.181/2019</u>

வாதி தரப்பு சாட்சி வா.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.கோ.ஜெகதீசன். உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திருமதி.தமிழரசி | த/பெ : | |
| | | க/பெ : | |
| வயது: | | ஊர் : | |
| தொழில்: | | அலைபேசி எண்: | |
| தேதி: | 10.01.2023 | முகவரி: | |

<u>1 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...</u>

நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து பாகபிரிவினை கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் அனைவரும் எனது நெருங்கிய உறவினர்கள் என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி லட்சுமியின் கணவர் பெயர் என்ன என்றால் திராவிடசெல்வன். 5ம் பிரதிவாதி சாந்தியின் கணவர் பெயர் என்ன என்றால் இளங்கோவன். திராவிடசெல்வன் மற்றும் இளங்கோவன் எனது உடன் பிறந்த சகோதரர்களா என்றால் ஆமாம். 1ம் வாதி தனலட்சுமி எனது உடன்பிறந்த சகோதரி இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் வாதி தனலட்சுமிக்கு எனது அப்பா, அப்பா அல்ல என்றும் அவருக்கு வேறு ஒருவர்தான் அப்பா என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தாத்தா பெயரிலும், எனது அப்பா சஞ்சீவன், அம்மா சீரங்காயி பெயரிலும் உள்ளது. தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து எனது அம்மா சீரங்காயி கடந்த 2005ல் 4ம் பிரதிவாதியான மணிகண்டன் பெயரில் உயிலாக எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. அது பொய். அந்த உயிலில் 1ம் வாதியின் கணவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி வேண்டுகோள் பெயரில் ஒத்திவைக்கப்படுகிறது.